# சுற்றுலாத்துறையின் விருத்தியினால் முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்; பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**A.N.M.Nawas (1), M.N.F.Nazha (2), M.T.Habeebullah (3)**

1 &2 Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, SEUSL

3 Lecturer, Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language

nawassharafyhani@gmail.com, habeeb09@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலக நாடுகளில் மிக வேகமாக முன்னேறி வருகின்ற துறைகளுள் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். ஊலகம் சுற்றும் நபர்களின் எண்ணிக்கை 1997ல் 61.3 கோடியாக இருந்தது. 2020க்குள் 160 கோடியாக அதிகரிக்கும் என உலக சுற்றுலா அமைப்பு அறிவித்துள்ளது. இத்துறையானது ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் அதிக பங்களிப்பை யும் அதிக அந்நிய செலாவணியை நாட்டிற்கு ஈட்டித்தருவதிலும் அதிக பங்காற்றுகின்றது. இதேவேளை இன்று மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட சவால்களில் சுற்றுலாத்துறையின் விருத்தியினால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகமானதாகும். இந்த வகையில், பொத்துவில் அறுகம்குடா முஸ்லிம் மாணவர்கள் சுற்றுலாத்துறை விருத்தியினால் எதிர்நோக்குகின்ற கல்வி மற்றும் ஒழுக்கம் சார் பிரச்சினைகள் முக்கியமானவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பொத்துவில் அறுகம்குடா பிரதேசமானது அலைச்சறுக்கல் விளையாட்டில் பிரசித்தி பெற்ற பிரதேசமாக இருப்பதனால் யுத்தத்திற்கு பிந்திய காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை “visit sri lanka year 2011” ன் பின்னர் வருடா வருடம் அதிகரித்த வண்ணமுள்ளது. இதன் காரணமாக இங்கு வாழும் மாணவர்கள் கல்வி மற்றும் கலாசார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த வகையில் இவ்வாய்வின் நோக்கமானது சுற்றுலாத்துறையின் விருத்தியினால் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதும், ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் சுற்றுலாப் பயணிகளின் பங்களிப்பினை இனங்காணுதல் மற்றும் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமாகும். இந்த ஆய்வானது முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக கள ஆய்வு, நேர்காணல், நேரடி அவதானிப்பு, வினாக்கொத்துக்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்தில் உள்ள 3 பாடசாலைகளில் இருந்து 162 மாணவர்கள், 34 ஆசிரியர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டும், 50 பெற்றோர்கள், 3 ஆசிரியர்கள், 8 ஜும்ஆ பள்ளிவாசல்களின் இமாம்கள் ஆகியோரிடம் நேர்காணல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக சஞ்சிகைகள், புள்ளிவிபரத் திரட்டுக்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையம் என்பன மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. இத்தரவுகள் பண்புசார்பாக இருப்பதனால் விடய விபரிப்புக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டது. இதற்கு MS Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. இவ்வாய்வின் மூலமாக கல்வியில் பின்னடைவு, கலாசார சீரழிவுகள், குற்றச்செயல்கள் அதிகரிப்பு, சுகாதாரப் கேடு, பாலியல் பலாத்காரம், போதைப் பொருள் பாவனை போன்ற பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. எனவே இப்பிரதேச மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இவ்வாறான பிரச்சினைகளை களைவதற்கு நடவடிக்கை எடுப்பது இளைய சமூகத்திற்கு செய்ய வேண்டிய சேவையாகும்.

**திறவுச் சொற்கள்**: சுற்றுலாத்துறை, மாணவர்கள், இடைவிலகல், அந்நியசெலாவணி, அலைச்சறுக்கல்

**ஆய்வு அறிமுகம்**

இன்று உலகளாவிய ரீதியில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் துறைகளுள் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். “ஒரு நாட்டிற்கோ நகரத்திற்கோ, பிராந்தியத்திற்கோ வெளிநாட்டுப் பயணிகள் வருகை தருவது, தங்கிச் செல்வது, பொருளாதார நோக்கை அடிப்படையாகக் கொண்ட அனைத்துச் செயற்பாடுகளின் தொகுப்பே சுற்றுலாவாகும்” (ஹெர்மன் விசுலாட், 1991). ஒரு நாட்டிற்கு

வருமானத்தையும் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுத்ரக்கூடிய ஒரு துறையாகவும் இது காணப்படுகின்றது.

இந்த வகையில் இலங்கையிலும் இச்சுற்றுலாத்துறையானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் 2011 ன் பின்னர் கணிசமானளவு அந்நியச் செலாவணியை இச்சுற்றுலாத்துறை ஈட்டித் தந்துள்ளது.( Annual Statistical Report 2016, SLTDA)

ஆரம்ப காலம் முதல் வெளிநாட்டவர்களை தன்பால் கவர்ந்திழுக்கும் ஒரு நாடாக இலங்கை திகழ்கின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இலங்கையில் பல்வேறு வகையான பிரயாணிகள் வந்து செல்கின்றனர். இலங்கையின் அமைவிடமும், அதன் பௌதீக அமைப்பும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

உலக சுற்றுலா நிறுவனத்தினால் அடையாளம் காணப்பட்ட உலகிலுள்ள 302 பிரதேசங்களில் இலங்கையின் 06 பிரதேசங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றாக அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பொத்துவில் அறுகம்குடா காணப்படுகின்றது. அத்துடன் அறுகம் குடா கடற்கரையை ஆசியாவின் சிறந்த 10 சுற்றுலா தலங்களில் 08 வது இடமாக பயண வழிகாட்டி நூலான “த லோன்லி பிளானட்” அறிவித்துள்ளது. இப்பிரதேசமானது சுற்றுலாத்துறைக்கான சிறந்த வளவாய்ப்புக்களைக் கொண்டுள்ள பிரதேசமாகும். ஆரம்ப காலங்களில் இப்பிரதேசத்து மக்கள் இப்பிரதேச கடற்பரப்பை மீன்பிடித் தொழிலுக்காக பயன்படுத்தி வந்தனர். பிற்பட்ட காலங்களில் அப்பிரதேச மீனவர்கள் அக்கடலில் தோன்றும் அலைகளில் ஒருவித விளையாட்டை உணர்ந்து தென்னை மரப்பட்டைகளைக் கொண்டு விளையாடி மகிழ்ந்தனர். இதுவே இப்போது பிரசித்தி பெற்ற விளையாட்டாக அலைச்சறுக்கு (Surfing) என பெயர் பெற்றுள்ளது.

யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் இப்பிரதேசத்துக்கு வருகை தருகின்ற சுற்றுலாப்பயணிகளின் விகிதம் 1.5 மில்லியன் (2014), 2.5 மில்லியன் (2016) என அதிகரித்துள்ளது.( SITDA அறிக்கை)

சுற்றுலாத்துறையின் மூலம் பல்வேறுபட்ட நன்மைகள் நாட்டுக்கும், மக்களுக்கும் இருந்த போதிலும் இத்துறையினூடாக பாதிப்புக்களும் தீமைகளும் அதிகரித்து காணப்படுகின்றன. குறிப்பாக சுற்றுலாத்துறைக்கு பொருத்தம் என அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் கல்வி பயிலும் மாணவர்களிடம் இது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அவை கல்வி, கலாசாரம், ஒழுக்கம் என அனைத்து பிரதான விடயங்களிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**




இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஒரு நகரமே பொத்திவில் ஆகும். பொத்துவிலின் 27 கிராம சேவகர் பிரிவுகளில் ஒன்றாக, பொத்துவிலில் இருந்து 4 கி.மீ தூரத்தில் அறுகம் குடா அமைந்துள்ளது. 2007ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் பிரகாரம் இந்நகரத்தின் மக்கள் தொகை 33,625ஆகவும், இத்தொகையில் 14,558 (43.3 வீதம்) 18 வயதிற்கு குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர் (Basic population information on Ampara District – 2007).

2004 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் "British pro surf Association" எனும் அமைப்பு அறுகம் குடாவில் சர்வதேச அலைச்சறுக்கல் போட்டியொன்றை நடாத்தியது. அதன் போது ஊடகங்கள் வழங்கிய செய்திகளால் அறுகம் குடா பிரதேசம் அலைச்சறுக்கல் விளையாட்டுக்கான தளமாக சர்வதேசம் அடையாளம் கண்டு கொண்டது. அதன் பின்னர் உலகிலுள்ள சிறந்த 10 அலைச்சறுக்கல் விளையாட்டுத் தளங்களில் ஒன்றாகவும், ஆசியாவின் அலைச்சறுக்கல் விளையாட்டுத் தளங்களில் 04வது இடத்திலும், இலங்கையிலுள்ள அலைச்சறுக்கல் விளையாட்டுத் தளங்களில் முதலாவது இடத்தையும் அறுகம் குடா கடல் பிரதேசம் பெற்றுக் கொண்டது. அலைச்சறுக்கல் விளையாட்டுச் சாகசங்கள் நிகழ்த்துவதற்குச் சாதகமான அலைகள் அறுகம் குடாக் கடலில் எழுகின்றன. அறுகம் குடா மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடற்பரப்புகளில் அலைச்சறுக்கு விளையாடுவதற்கு 10 இடங்கள் உள்ளன. ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான காலப்பகுதி இங்கு அலைச்சறுக்கல் விளையாட்டுக்கு ஏதுவாக அமைந்துள்ளது. அறுகம் குடா கடலில் ஆண்டுதோறும் பன்னாட்டு அளவிலான அலைச்சறுக்குப் போட்டிகள் நடைபெறுகின்றன. அலைச்சறுக்கிற்கு தேவையான படகுகளை வாடகைக்கு கொடுப்பதும், சுற்றுலாப் பயணிகளுக்கு அலைச்சறுக்கலை கற்றுக் கொடுப்பதும் இங்குள்ள மக்களின் தொழிலாக காணப்படுகின்றது. CNN தொலைக்காட்சி 2013ல் வெளியிட்ட அலைச்சறுக்கு விளையாட்டிற்கு உகந்த உலகின் சிறந்த 50 இடங்களில் ஒன்றாக அறுகம் குடா இடம் பிடித்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

சுற்றுலாத் துறையின் விருத்தியின் மூலம் பல சாதகமான தன்மைகள் காணப்பட்ட போதிலும் பாதகமான விளைவுகளும் இருப்பதை அவதானிக்கலாம். அந்த வகையில் மாணவர்களிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களாக பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகல், கலாசார விழுமியங்களில் மாற்றம், அதிக பணப் பறிமாற்றம், போதைப் பொருள் பாவனை, கல்வியில் நாட்டமின்மை, பாடசாலைக்கு சமூகமளித்தல் குறைவு, நெறிபிறழ்வுள்ள மாணவர்கள் அதிகரிப்பு, உடை பாவனையில் மாற்றம் என பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

**பிரதான நோக்கம்**

- சுற்றுலாத் துறை விருத்தியின் காரணமாக ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களை அடையாளம் காணுதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**துணை நோக்கங்கள்**

- ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்கள் எதிர் கொள்ளும் கல்வி ரீதியான பாதிப்புக்களை இனங்காணல்.
- ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்கள் எதிர் கொள்ளும் கலாசார ரீதியான பாதிப்புக்களை இனங்காணல்.
- ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

சுற்றுலாவின் கேடுகள் எனும் அத்தியாயத்தில் சுற்றுலாவினால் ஏற்படும் தீமைகளாக வரலாற்றுச் சின்னங்களின் சீரழிவு,சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு, நோய் பரவுதல், உயிரினங்களின் சுற்றுப்புறச் சூழல்

கெடுகிறது,வட்டார மக்களின் வசதிகள் குறைகின்றன,உள்ளூர் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிறது,பண்பாட்டுச் சீரழிவு போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(இராசசேகர தங்கமணி,(2006),சுற்றுலாவியல் ஓர் அறிமுகம்,பக்கம் 327-330) இந்நூலில் நூலாசிரியர் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியால் மக்கள், மாணவர்கள், சூழல் என அனைத்து பகுதியிலும் பாதிப்புக்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக இளம் தலைமுறையினரின் நன்னடத்தை குன்றி பெரியவர்களுடன் மரியாரதயின்றி நடந்து கொள்ளல், முறையற்ற வியாபாரங்களில் ஈடுபடல் என்பன நிகழ்கின்றன. (Nandusena Ratnapala,(1999),Tourism in Sri Lanka: The social impact)

கலாசார சீரழிவுகள், குற்றச்செயல்கள் அதிகரிப்பு, வாழ்க்கை முறைகள் பாதிப்படைதல், மனித உரிமைகள் மீறல்கள் அதிகரித்தல், சுகாதாரப் பிரச்சினைகள், நகராக்கம் மற்றும் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு போன்ற சமூகரீதியான பிரச்சினைகளும் அதிகரித்த திண்மக்கழிவுகளின் வெளியேற்றம் காரணமாக நீர் மாசடைதல், நிலம் மாசடைதல், உயிர்ப்பல்வகைமை பாதிப்பமைதல், இயற்கை அழகு பாதிப்படைதல், பாரம்பரிய தளங்கள் மாற்றமடைதல் போன்ற சூழல் ரீதியிலான பிரச்சினைகளும் அடையாளம் காணப்பட்டன. (Majidha Banu,சுற்றுலாத்துறையின் விருத்தியினால் மக்கள் எதிர்நோக்குகின்ற சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள்: நுவரெலியா பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு, 2017)

**ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வானது பண்பு ரீதியான ஆய்வாக அமைவதால், விடய விபரிப்பினை மேற்கொள்ளத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு, ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிய தேவையான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளது.

**தரவு சேகரிப்பு**

**முதலாம் நிலைத் தரவுகள்**

முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தகவல் சேகரிப்பு கருவிகளான நேர்முகம் காணல், நேரடி அவதானிப்பு, வினாக்கொத்து என்பவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. பொத்துவில் அறுகம் குடா பிரதேச அல் அக்ஸா, அல் இஸ்ராக், அல் இர்பான் ஆகிய மூன்று பாடசாலைகளில் இருந்தும் தரம் 09,10,11ல் கல்வி கற்கும் 648 மாணவ மாணவிகளில் இருந்து 162 நபர்களும் அப்பாடசாலைகளின் 35 ஆசிரியர்களும் திரண்ட மாதிரி முறை(Cluster Sampling) மூலம் வினாக்கொத்து வழங்கப்பட்டும். 50 பெற்றோர்களும் 8 ஜும்ஆ பள்ளிவாசல்களின் இமாம்களும் அப்பிரதேசத்து ஆசிரியர்களில் 28 வருட கற்பித்தல் அனுபவம் உள்ள 03 ஆசிரியர்களிடம் எதேச்சையான மாதிரி முறை (Accidental Sampling) மூலம் தெரிவு செய்யப்பட்டு நேர்காணல் மூலம் தகவல் சேகரிக்கப்பட்டன.

**இரண்டாம் நிலைத் தரவுகள்**

இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமாணங்கள், பத்திரிகைகள், இணையம் என்பன மூலம் தகவல்கள் பெறப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**தரவுப்பகுப்பாய்வு**

சேகரிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் MS EXCEL மென்பொருள் பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு, வரைபடங்கள் மூலமாக அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வும் முடிவுரையும்**

பொத்துவில் அறுகம் குடா பிரதேச சுற்றுலாத் துறையினினூடாக இலங்கையின் பொருளாதார விருத்தியில் அபிவிருத்தி இடம்பெற்ற போதிலும் அங்குள்ள மாணவர் கல்வியிலும், கலாசாரத்திலும் பல பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளதே இவ்வாய்வின் ஊடாக கண்டறியப்பட்ட உண்மையாகும்.

**கல்வி ரீதியான பாதிப்புக்கள்.**

கல்வி ரீதியான பாதிப்புக்களை கண்டறிய மாணவர்களிடம் 15 வினாக்களும் ஆசிரியர்களிடம் 10 வழங்கப்பட்டது. அவற்றில் பாடசாலையை விட்டும் இடைவிலகல், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் காலங்களில் பாடசாலைக்கு மாணவர்களின் வருகை வீதம் குறைவடைதல், பரீட்சையில் போதிய சித்தியின்மை, பாடங்களில் போதிய கவனமின்மை, பணம் உழைப்பதன் மீது அதிக ஆர்வம் ஆகிய காரணங்கள் மாணவர்களாலும் ஆசிரியர்களினாலும் சுட்டிக்காட்டப்பட்டன.

**இவ்வாறான பாதிப்புக்கள் நிகழ காரணமாக அமையும் விடயங்கள்**

சிறுவயதில் உழைக்க வேண்டும் எனும் ஆர்வம், நன்பர்களிடம் காணப்படும் பணப்புளக்கம், குடும்ப வறுமை, தான் விரும்பும் அனைத்தையும் அடைய வேண்டும் எனும் ஆர்வம், பெற்றோர் உல்லாச விடுதிகளை அமைத்திருத்தல் என்பன பிரதான காரணிகளாகும்.

**கலாசார ரீதியாக ஏற்படும் பாதிப்புக்கள்**

கலாசார ரீதியிலான பாதிப்புக்களை கண்டறிய மாணவர்களிடம் 10 வினாக்களும் ஆசிரியர்களிடம் 5 வினாக்களும் வழங்கப்பட்டதுடன் பள்ளிவாசல் இமாம்களிடம் நேர்காணல் மூலமாக வினாத் தொடுக்கப்பட்டது. இதன் ஊடாக ஐந்து நேர தொழுகையில் மாணவர்களின் பங்குபற்றல் குறைவு, மார்க்க வகுப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமை, இரவு நேர கழியாட்டங்களில் கலந்து கொள்ளல், ஆடையில் மாற்றம், முடி வெட்டுவதில் ஹிப்பு போன்ற வடிவமைப்புக்களை பின்பற்றல், புகைத்தல் பாவனை, முதியோருக்கு மரியாதை செலுத்தாமை, பேச்சு முறையில் மாற்றம் போன்ற பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ள நிலையை கண்டறிய முடிந்துள்ளது.


**இவ்வாறான பாதிப்புக்கள் நிகழ காரணமாக அமையும் விடயங்கள்**

சுற்றுலாப் பயணிகளின் ஆடை முறை, ஊருக்குள் சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டம், சுற்றுலாப் பயணிகளுக்கு கடலலைச் சறுக்கல் விளையாட்டை பயிற்றுவித்தல், சுற்றுலாப் பயணிகள் நீராடுவதை இரசிப்பதற்காக கடற்கரைக்கு செல்லுதல், சுற்றுலாப் பயணிகளுடன் நட்பு கொள்ளல், கற்றல் நோக்கத்துடன் பழகுதல் போன்றன முக்கிய விடயங்களாகும்.

**நிகழ்வு**

மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற கல்வியை வழங்கும் நோக்குடன் பாடசாலையில் அனுமதி பெற்று உள்நுழைந்த 3 சுற்றுலாப் பயணிகள் மதம் மாற்றும் போதனைகளில் ஈடுபட்டமை.(நேர்காணல்)

இந்த வகையில் சுற்றுலாத் துறையின் விருத்தியினால் மாணவர்களிடம் ஏற்படுத்தியுள்ள பிரதான பாதிப்புக்களை பின்வரும் படம் சுட்டிக்காட்டுகின்றது




Source: Field data collection 2018

இதன்படி அதிகளவிலான பாதிப்புக்களாக பாடசாலைக் கல்வியை விட்டும் இடைவிலகல், கலாசார சீரழிவு இடம்பெறுவதாக மாணவர்கள்,பெற்றோர்கள், பள்ளிவாசல் இமாம்கள் ஆகியோரின் கருத்துக்களின் மூலமாக அறிய முடிந்தது.

சுற்றுலாப் பயணிகளின் செயற்பாடுகளினால் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாதிப்புக்கள் என்பவற்றை ஆய்வுக்காக உட்படுத்திய மூன்று பாடசாலை ஆசிரியர்களின் அவதானத்தின் விகிதத்தினை பின்வரும் படம் காட்டுகிறது.




Source: Field data collection 2018

எனவே ஆய்வுப் பிரதேச மாணவர்களின் கல்வி மற்றும் கலாசார எழுச்சிக்காகவும், மாணவர்கள் நாளைய சமூகத்தின் தலைவர்கள் என்ற அடிப்படையிலும் இம்மாணவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் பின்வரும் சாத்தியமான ஆலோசனைகளை இவ்வாய்வின் மூலம் முன்வைக்க முடியும்.

**கல்வி ரீதியான சவால்களுக்கான பரிந்துரைகள்:-**

- பாடசாலை சமூகத்தின் உதவியுடன் மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வமூட்டல் நிகழ்வுகளை ஏற்படுத்தல்.
- மாணவர்களுக்கு பாடசாலை சமூகம், பழைய மாணவர்கள் அமைப்புடன் இணைந்து கல்வி உளவியல் கருத்தரங்குகளை அமைத்தல்.
- பாடசாலைகளில் மாலை நேர வகுப்புக்களை ஏற்படுத்தி கல்வியின் பக்கம் கவனத்தை திரப்புதல்.
- கல்வியால் மாத்திரமே சமூகம் சிறந்த உயர்வை அடைய முடியும் எனும் எண்ணக்கருவை ஊட்டல்.
- கல்வியின் அவசியமும் சமூகத்தின் தற்கால நிலை பற்றியும் கல்வியலாளர்கள் ஊடாக பெற்றோருக்கு தெளிவுபடுத்தல்.

**கலாசார ரீதியான சவால்களுக்கான பரிந்துரைகள்:-**

- பள்ளிவாசல் சமூகத்தினூடாக பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு அமர்வுகளை ஏற்படுத்தி எதிர்கால சவால்கள் தொடர்பாகவும், பெற்றோர்களின் கடமைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தல்
- இஸ்லாமிய நிறுவனங்கள் ஊடாக மாணவர்களுக்கு தேவையான மார்க்க வழிகாட்டல்களை பெற்றுக் கொடுத்தல்
- அனைத்துப் பாடசாலைகளிலும் அஹதிய்யா பாடசாலையை இயங்கும் நிலைக்கு கொண்டுவரல்.
- அல்-குர்ஆன் பாடசாலைகளின் இயக்கத்தன்மையை அதிகரத்தலும், கண்கானித்தலும்
- பள்ளிவாசல்களில் மார்க்க வகுப்புக்களை ஆரம்பித்து பெற்றோருடன் பிள்ளைகளை கலந்து கொள்ள ஏற்பாடு செய்தல்.
- ஊருக்குள் சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டத்தை குறைக்க வாகன உரிமையாளர்களுடனும், வாகன சாரதிகளுடனும் ஊர் தலைவர் சமூகநலனுடன் வழிகாட்டல் உறவைப் பேணல்.
- ஸகாத், நலன்புரி அமைப்புக்களின் உதவியை வறிய குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுத்து சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப் படுவதை முற்றாக தவிர்க்க முயற்சித்தல்

எனவே சுற்றுலாத்துறையின் விருத்தியினால் நாளைய சமூகம் எதிர்கொள்ளும் சவால்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள ஆரோக்கியமான திட்டங்களுடன் பயணிக்க வேண்டிய தேவை முஸ்லிம் சமூகத்துக்கு உண்டு. மாணவர் சமூகம் சீரற்றுப் போவதனால் ஒழுகமற்ற, நோயுற்ற, ஊனமுற்ற ஓர் தலைமுறையே உருசாக்கப்படும். இவ்வாறான பாதக நிலையில் இருந்து சமூகத்தை மீட்டெடுப்பது பொறுப்புள்ளவர்களின் கடமை என்பதை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

**உசாத்துணைகள்**

1- Nandasena Ratnapala, (1999). Tourism in Sri Lanka: The social impact. 41Lumbini Avenue, Ratmalana,Sri Lnaka.

2- இராசசேகர தங்கமணி,ம.(2003). சுற்றுலாவியல் ஓர் அறிமுகம். முத்துப்பதிப்பகம், புதுக்கோட்டை-62201.

3- கிருட்டிணசாமி, வே. (2000). சுற்றுலா வளர்ச்சி. மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

4- அருண்,ஆ. சுற்றுலாத்துறை வளர்ச்சியில் இலங்கை எதிர்நோக்கி நிற்கின்ற சவால்கள். வீரசேகரி வெளியீடு, இலங்கை.

5- குகபாலன், கா. இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் துறையின் அண்மைக்காலப் போக்குகள். யாழ்ப்பான புவியலாளன்.

6- www.sltda.gov.lk

7- www.srilankatourism.org/index.php

8- http://www.sltda.lk/visit_srilanka

9- www.thinakaran.lk/2017/06/22/குற்றம்/18237